## சுருக்கம்

பொதுப்பணிகள் – சிறைகள் மற்றும் சீர்த்திருத்தப் பணிகள் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி– கருணையடிப்படையில் பணிநியமனம் – திருமதி.ரா.பிந்தியா, த/பெ. (காலம் சென்ற) திரு.கே.ராஜாமணி, இரண்டாம் நிலைக் காவலர், மத்திய சிறை, கோவை - சிறைத்துறையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது - பணி வரன்முறை செய்து ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**உள் (சிறை-2) துறை**

அரசாணை (3ப) எண்.75 **நாள்: 31.10.2022**

**சுபகிருது வருடம், ஐப்பசி-14,**
**திருவள்ளுவர் ஆண்டு - 2053**

**படிக்க:-**

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
3. காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைவரின் கடித எண்.42117/இ.எஸ்.2/2007, நாள் 02.07.2020.

*****

**ஆணை:-**

திரு.கே.ராஜாமணி, என்பவர் கோவை மத்திய சிறை கட்டுப்பாட்டிலுள்ள கூடலூர் கிளைச் சிறையில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த நிலையில் 07.03.2005 அன்று மரணமடைந்தார். அவரது மகள் திருமதி.ரா.பிந்தியா, என்பவர் தனக்கு கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் கோரி விண்ணப்பித்திருந்தார். இவர் பணி கோரி விண்ணப்பித்த நாளில் இளநிலை உதவியாளர் பணிக்கான அனைத்து தகுதிகளும் பெற்றிருந்ததால், முதுநிலைப் பட்டியலில் இவரது பெயர் சேர்க்கப்பட்டு, திருமதி.ரா.பிந்தியா, என்பவர் சிறைத்துறையில் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக புழல், பெண்கள் தனிச்சிறையில் பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து புழல், பெண்கள் தனிச்சிறை

கண்காணிப்பாளர் செயல்முறை ஆணையின்படி 05.06.2020 முற்பகல் முதல் முற்றிலும் தற்காலிக இளநிலை உதவியாளராக புழல், பெண்கள் தனிச்சிறையில் பணி நியமனம் செய்யப்பட்டார். எனவே, திருமதி.ரா.பிந்தியா, என்பவருடைய பணியினை அவர் பணிநியமனம் செய்யப்பட்ட நாளான 05.06.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்ய காவல்துறை இயக்குநர்/ தலைமை இயக்குநர், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் அவர்கள் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. சிறைத்துறையில், கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி ரா.பிந்தியா, என்பவர் கருணையடிப்படையில் பணி கோரி விண்ணப்பித்த நாளில் 18 வயதினை நிறைவு செய்யாததாலும், தனியருக்கு பணிநியமனத்திற்கு முன்பே திருமணமாகியுள்ளதாலும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ன் பிரிவு 20(6)(b) மற்றும் பிரிவு 15 ஆகியவை தளர்வு செய்யப்படுவதுடன், தனியருக்கு பணப்பலன்கள் பணிநியமன நாள் முதல் வழங்க ஏதுவாக இச்சட்டப்பிரிவான பிரிவு 28(2)-ம் தளர்வு செய்யப்பட வேண்டும். மேலும், தனியர் பணி கோரி விண்ணப்பித்த நாளில் 18 வயதினை நிறைவு செய்யாததால், அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.1) துறை, நாள் 23.01.2020-க்கும் விலக்களிக்கப்பட்டு, தனியரின் பணியானது 05.06.2020 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தப்படல் வேண்டும்.

3. எனவே, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட காவல் துறை இயக்குநர் / தலைமை இயக்குநர் சிறைகள் மற்றும் சீர்த்திருத்தப் பணிகள் அவர்களின் கருத்துருவினை ஏற்று, கருணையடிப்படையில் சிறைத்துறையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.ரா.பிந்தியா, என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 23.03.2007 அன்று விண்ணப்பித்தபொழுது 18 வயதினை நிறைவு செய்யாத காரணத்தாலும், அன்னாருக்கு பணி நியமனத்திற்கு முன்பே திருமணமாகியுள்ளது என்பதாலும், "தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016ன், பிரிவு 58-ன் கீழ், ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 20(6)(b), பிரிவு 15 மற்றும் தனியருக்கு கிட்டும் பணப்பலன்களை பணிநியமன நாள் முதல் வழங்க ஏதுவாக பிரிவு 28(2) ஆகியவற்றினை தனியர் சார்பாக தளர்வளித்தும் தனியர் பணி கோரி விண்ணப்பித்த நாளில் 18 வயதினை நிலைறவு செய்யாததால், அரசாணை

(நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ-1) துறை, நாள் 23.01.2020-க்கு தனியர் சார்பாக விலக்களித்து, தனியரின் பணியானது 05.06.2020 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்த அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

4. மேலும், இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படித் தகுதியுடையவராகிறார்.

5. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அ.சா.எண்.16970/Q-1/2022-1, நாள் 15.10.2022 -ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. பணீந்திர ரெட்டி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

**பெறுநர்**

காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர்,
சிறைகள் மற்றும் சீர்த்திருத்தப் பணிகள்துறை, சென்னை – 8.
திருமதி.ரா. பிந்தியா, இளநிலை உதவியாளர், மத்திய சிறை,
கோயம்புத்தூர். (காவல்துறை இயக்குநர் / தலைமை இயக்குநர்,
சிறைகள் மற்றும் சீர்த்திருத்தப் பணிகள்துறை மூலமாக).
முதன்மை மாநில கணக்காயர், சென்னை-18.
மாவட்ட கருவூல அலுவலர், கோயம்புத்தூர்.

**நகல்::**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,
சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

31/10/2022
பிரிவு அலுவலர்

022569

என்.42117/இஎஸ்.2/2007

காவல்துறை இயக்குநர் / சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்
தலைமை இயக்குநர் அலுவலகம்,
சென்னை–8. நாள். .11.2022

சார்பு செய்யப்படுகிறது

காவல்துறை இயக்குநர் /
சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள்
தலைமை இயக்குநருக்காக

பெறுநர்
கண்காணிப்பாளர், மத்திய சிறை, கோவை.(இணைப்புடன்)
திருமதி.ரா.பிந்தியா, இளநிலை உதவியாளர், மத்திய சிறை, கோவை.
(கண்காணிப்பாளர், மத்திய சிறை, கோவை மூலமாக)
நகல் – இஎஸ்.1, உதவியாளர், தலைமை அலுவலகம் (நடப்பு எண்ணில்)
நகல் – இஎஸ் பிரிவு கண்காணிப்பாளர்

16/11/2022

17/11/2022

ந.க.: 513/ டீ./ 22 நாள்: .11.2022

மேலனுப்பப்படுகிறது

.XI.22
Superintendent of Prisons
Central Prison, Coimbatore-18

பெறுநர்
திருமதி ரா. பிந்தியா, இ.நி.உ. ம.சி கோவை
நகல் கா., ம.சி. கோவை